**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை :** கேள்வி ஆசிரியர்களைப் பற்றியது என்றாலும் உறுப்பினர் அவர்களுடைய சந்தேகத்தைத் தீர்க்க முற்படுகிறேன். தமிழ்நாட்டில் அரசுத் துறையின்மூலம் நேரடியாக நடைபெறுகிற பள்ளிகள் 6; தனியார் துறைப் பள்ளிகள் 14. இதிலே செங்கற்பட்டு மாவட்டத்திலே நடைபெறுகிற சீர்திருத்தப் பள்ளிகள் இரண்டில் மாணவர்கள் முறையே 689, 381 ஆகும். அரசினர் இளநிலைப் பள்ளி, ராணிப்பேட்டையில் 574 மாணவர்கள்; தஞ்சையில் 640 பேர்கள்; கடலூரில் 47 மாணவர்கள்; அரசினர் முதுநிலை, இளநிலை சீர்திருத்தப்பள்ளி சென்னையில் 301. இதற்காக அரசாங்கத்திலிருந்து செலவு செய்யப்படுகிற தொகை சென்னை 9,89,000 ரூபாய், செங்கற்பட்டு 5,85,000 ரூபாய்; ராணிப்பேட்டை 6,17,000 ரூபாய், தஞ்சை 8,31,000 ரூபாய். கடலூரில் மாணவர்களுடைய மொத்த சதவிகிதத்தின் அடிப்படையில் ஒதுக்கப்படுகிறது. சரியான எண்ணிக்கை விவரம் இல்லை. இது போலவே தனியார் நடத்தும் பள்ளிகளுக்கும் அரசு மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

### புளிய மரங்கள் வளர்ப்பு.

* 197 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் புளிய மரங்களை அதிகம் பயிரிடுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** 1975-76 ஆம் ஆண்டு 696 ஹெக்டர் பரப்பளவில் புளிய மரங்கள் வளர்க்கும் திட்டம் இருக்கிறது.

**திரு. என். கிட்டப்பா :** நமது மாநிலத்திற்குத் தேவையான புளி கிடைக்காமல் பெரும்பாலும் கர்நாடகத்திலிருந்தும் கேரளத்திலிருந்தும் கொண்டு வரப்படுவதாகச் சொல்கிறார்கள். இந்தக் குறையைப் போக்க அரசினர் நெடுஞ்சாலையின் இரண்டு பக்கங்களிலும் புளிய மரங்களை வைத்தால் வடலூர் இராமலிங்க அடிகளார் கூறியதுபோல் கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்தருவே' என்றது போல் நிழல் கிடைப்பதோடு புளியும் தேவையான அளவு கிடைக்குமாதலால் அதற்கு ஆவன செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** அதற்காகத்தான் வர இருக்கும் நிதியாண்டில் 696 ஹெக்டர் பரப்பளவில் புளிய மரங்களை வளர்ப்பதற்கான திட்டம் இருக்கிறது என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை அதிகப்படுத்த வேண்டுமென்று சொன்னால் அது பற்றிப் பரிசீலிக்கப் படும்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** புளிய மரங்களை அதிகம் பயிரிட அரசுக்கு உத்தேசம் இருப்பதாகச் சொன்னார்கள். ஏற்கனவே நெடுஞ் சாலையில் இருக்கக்கூடிய பல புளிய மரங்கள் பலரால் வெட்டப்படுகின்ற நிலையும், ரோட்டை விஸ்தரிப்பதற்காக, உயர்த்துவதற்காக என்ற காரணங் களால் வெட்டப்படுகின்ற நிலையும் புளிய மரத்தை அதிகப்படுத்தும் திட்டம் அல்லவே. இது குறித்து அரசின் நிலை என்ன?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தவிர்க்க முடியாத காரணத்தால் ரோட்டை விஸ்தரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் இருக்கின்ற மரங்களை வெட்டித்தான் ஆகவேண்டும்.

**திரு. கு. இராசமாணிக்கம் :** புளிய மரம் குறைந்த காலத்தில் பலன் அளிக்கிறது. ஆயிரக்கணக்கான ஆண்டுகள் நிலைத்து நிற்கிறது. இன்றைய தினம் பஞ்சாயத்துகளுக்கு வருவாய் இல்லாத நிலையில் கிராமப் பஞ்சா யத்துப் புறம்போக்குகளிலும் சாலை மருங்கிலும் புளிய மரங்களை வைத்து பஞ்சாயத்துகளுக்கு வருமானத்தைத் தேடித் தர அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** புளிய மரங்களை அதிகமாக வளர்க்க வேண்டுமென்பது நல்ல திட்டந்தான். ஒவ்வொரு ஆண்டுத் திட்டத்திலும் இதற்காக எவ்வளவு நிதி ஒதுக்க முடிகிறதோ அந்த அளவுக்கு வளர்க்கப் படுகிறது. அதையொட்டித்தான் வர இருக்கிற ஆண்டில் 696 ஹெக்டரில் வளர்க்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

## *Rosewood cultivation*

* 198 *Q.*—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state—

(*a*) whether Rosewood is cultivated in this State;

(*b*) if so, the details thereof; and

(*c*) the incentives offered for the cultivation of Rosewood?